Thiruvarur Divisional Level Scout standard **Judging Competition** was conducted at our school on 15.02.2017. The scouts and guides of Tiruvarur District, Nagapattinam Education District, Kumbakonam Education District participated in the camp. Among them our school guides also participated in the camp. Our school won the second place.

# தினகரன் செய்தித்தாள்-நாள்:17.02.2017- பக்கம்-15

திருத்துறைப்பூண்டியில்

## மண்டல சாரண, சாரணியர் அணி தரநிலை போட்டி தேர்வு முகாம்



► திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற மண்டல அளவிலான சாரண சாரணியர்களுக்கான அணி தரநிலைப்போட்டி தேர்வு முகாமில் சாரணர்கள் கூடாரம் அமைக்கிறார்கள்.

திருத்துறைப்பூண்டி,பிப். 17: திருத்துறைப்பூண்டி மண்டல சாரண, சாரணியர் அணி தரநிலை போட்டி தேர்வு முகாம் நடந்தது.

திருவாரூர் மண்டல அளவிலான சாரண சாரணியர்களுக்கான அணி தரநிலைப்போட்டி தேர்வு முகாம் திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. போட்டியினை பள்ளி நிர்வாக பிரதிநிதி சோமசுந்தரம் துவக்கி வைத்தார். தேர்வு முகாம் ஒருங்கிணைப்பாளராக மாநில பயிற்சியாளர் செல்லத்துரை, நடுவர்களாக கும்பகோணம் கல்வி மாவட்ட சாரண அமைப்பு ஆணையர் தமிழ்குமரன், நாகை மாவட்ட சாரண அமைப்பு ஆணையர் தியாகராஜன், திருவாரூர் மாவட்ட சாரணிய அமைப்பு ஆணையர் கவிதா செயல்பட்டனர். நாகை, திருவாரூர், கும்பகோணம் கல்வி மாவட்டத்திலிருந்து 5 பள்ளிகளை சேர்ந்த 16 சாரணர்கள், 24 சாரணியர்கள் கலந்து கொண்டனர். இதில் மாநில அளவில் வரும் 21, 22 தேதிகளில் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள சாரண, சாரணியர் மாநில தலைமையகத்தில் நடைபெறும் மாநில அளவிலான தேர்வு முகாமில் சாரணர் பிரிவில் நன்னிலம் வள்ளலார் மெட்ரிக் பள்ளியும், சாரணியர் பிரிவில் கும்பகோணம் கல்வி மாவட்டம் உமையாள்புரம் தி உயர்நிலைப்பள்ளியும் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏற்பாடுகளை தலைமையாசிரியை லெட்சுமி பிரியா, மாவட்ட இணைச் செயலர் சக்கரபாணி, உடற்கல்வி இயக்குனர் பாலமுருகன், உடற்கல்வி ஆசிரியர் சசிகுமார் செய்திருந்தனர்.

CAMPUS INTERVIEW
We welcome the HR team for conducting the
POOLED OFF CAMPUS INTERVIEW
Eligibility : 2017 batch